இழக்கப் அவர் பேசினார்.

கட்சி கொடியேற்றி, பழனிசாமி பேசினார்.

# சைபர் குற்றத்தில் உடனடி புகார் அவசியம்

## கருத்தரங்கில் கர்நாடக வழக்கறிஞர் விளக்கம்

**சென்னை, ஜூலை 24–**
''சைபர் கிரைம் என்ற இணைய வழி குற்றங்கள் தொடர்பான நோய்க்கு, 1930 என்ற எண்ணிற்கு, 24 மணி நேரத்தில் புகார் அளிப்பதே மருந்தாக இருக்கும்,'' என, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ரங்கநாத் கூறினார்.

தமிழக காவல் துறையின், மாநில சைபர் கிரைம் பிரிவும், சைபர் சொசைட்டி ஆப் இண்டியா என்ற அமைப்பும் இணைந்து, இணைய வழி குற்றங்கள் குறித்து கருத்தரங்கை, சென்னை அடையாறில் நேற்று நடத்தின.

மூத்த வழக்கறிஞர் தியாகராஜன் தலைமையில் நடந்த கருத்தரங்கை, சைபர் சொசைட்டி ஆப் இந்தியா அமைப்பின் நிறுவனர் ஜெமினி ராமமூர்த்தி துவக்கி வைத்தார்.



■ சென்னையில் நடந்த கருத்தரங்கில், வழக்கறிஞர் ரங்கநாத் பேசினார். அருகில், சைபர் சொசைட்டி ஆப் இந்தியா தலைவர் விஜயகுமார், துணைத் தலைவர்கள் ஸ்ரீதர், பிரேம் ஆனந்த், பொதுச்செயலர் பாலுசுவாமிநாதன், மூத்த வழக்கறிஞர் தியாகராஜன் மற்றும் தமிழக காவல்துறை சைபர் க்ரைம் விங் டி.எஸ்.பி. ஸ்ரீலிசா ஸ்டெபிலா தெரஸ்.

கருத்தரங்கில், சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து திறம்பட வாதாடி, இழப்பீடு தொகை பெற்றுத் தந்த, கர்நாடக வழக்கறிஞர் ரங்கநாத் பேசியதாவது:

சைபர் கிரைம் எனும் இணைய வழி குற்றங்களுக்கு எல்லையே இல்லை. இதில், 99 சதவீதம் சைபர் குற்றங்கள், பணத்தை சுருட்டவே நடக்கிறது. இதற்கு, அவர்கள் பணத்தையே மூலதனமாக பயன்படுத்துகின்றனர்.

கிரிப்டோ கரன்சியில், 2,000 ரூபாய் முதலீடு செய்த ஒருவருக்கு, அதிக பணம் கிடைப்பது போல நம்ப வைத்து, 81 லட்சம் ரூபாய் வரை மோசடி செய்துள்ளனர்.

சமீபத்தில், பிரபல தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த மனித வள அதிகாரிகள் போல, இ – மெயில் அனுப்பி பண மோசடி நடந்துள்ளது. வங்கிகளில் ஊடுருவி கோடிக் கணக்கில் பணம் சுருட்டப்பட்டுள்ளது.

எல்லாரிடமும், சைபர் குற்றங்கள் தொடர்பாகவும், அதில் சிக்கிக்கொள்ளாமல் இருப்பது பற்றிய விழிப்புணர்வும் அதிகரிக்க வேண்டும். சைபர் கிரைம் எனும் நோய்க்கு, 1930 என்ற எண்ணிற்கு, 24 மணி நேரத்திற்குள் புகார் அளிப்பதே மருந்தாக இருக்கும்.

பணம் இழப்பு அல்லது பாலியல் ரீதியான துன்புறுத்தல் என, எத்தகைய சைபர் குற்றங்கள் குறித்தும், அந்த எண்ணிற்கு தொடர்பு கொண்டால், போலீசார், பணம் பறிபோய் விடாமல் முடக்கி விடுவர்.

பாலியல் தொல்லை சார்ந்த புகார்களுக்கு, பாதிக்கப்பட்ட நபரின் பெயரைக் கூட தெரிவிக்க வேண்டியது இல்லை.

இவ்வாறு, அவர் பேசினார்.

கருத்தரங்கில், டி.எஸ்.பி., ஸ்ரீலிசா ஸ்டெபிலா தெரஸ், சைபர் சொசைட்டி ஆப் இந்தியா அமைப்பின் தலைவர் விஜயகுமார், செயலர் பாலு சுவாமிநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.